இது
நம்தேசம்
‘ Registered in the department of posts of srilanka under No QD/173/news/2014 ’
ரூபா 50/=

பார்வை 04 | ஜனவரி 01 - 15, 2023 | மாதம் இரு இதழ் | பக்கங்கள் - 12

**சிங்கத்தின் குகைக்குள் அஞ்சா நெஞ்சத்தவர்**

# மாமனிதர் குமார் பொன்னம்பலம்



மு.ஈழத்தமிழ்மணி

**05.01.2023 அன்று குமார் பொன்னம்பலம் அவர்களது 23ம் ஆண்டு நினைவு நாளையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.**

2000 ம் ஆண்டு ஜனவரி 5ம் நாள் - தமிழர் தேசமெங்கும் சோகத்தில் மூழ்கியிருந்தது. தமிழர் உரிமைக்காக குரல் கொடுத்து வந்த குமார் பொன்னம்பலம் கொழும்பு வெள்ளவத்தை இராமகிருஸ்ண வீதியில் வைத்து சிறிலங்கா அரச பயங்கரவாதத்தினால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

தமிழ்த்தேசிய இனம் தனது வாழ்வோ, சாவோ எனப் போராடிக்கொண்டிருந்த காலகட்டத்தில் தமிழ்த்தேசிய அரசியலிலும், தமிழினத்தின் விடிவுக்கான போராட்டத்திலும் துணிச்சலும் நேர்மையும் வெளிப்படைத்தன்மையுமாய் சிங்கத்தின் குகையில் கர்ஜித்த மாமனிதர் குமார்பொன்னம்பலத்தின் மறைவு தமிழர் இதயங்களில் பேரிடியாய் இறங்கியிருந்தது.

குமார் பொன்னம்பலம் தமிழ்மக்களின் உரிமையை முன்னிறுத்தப் பாடுபடும் ஒரு ஜனநாயக போராளியாகவே விளங்கினார். தமிழ்மக்களுக்கு எங்கெல்லாம் அநீதி நிலவியதோ அதற்கு எதிராக போராடியது மட்டுமல்லாமல், சிங்கள – முஸ்லிம் மக்களுக்கு எதிரான அரசினால் ஏற்பட்ட அடக்குமுறைகளுக்கு எதிராகவும் குரல் கொடுத்த அப்பழுக்கற்ற மாமனிதர்.

இறக்கும்வரை சிங்களத்தின் இனவாதக் கோட்டையாக விளங்கிய கொழும்பிலிருந்தே குமாரின் சிம்மக்குரல் உரிமைகோசத்தை எழுப்பிக் கொண்டேயிருந்தது.

தமிழ் மக்களது உரிமைப்போராட்ட வரலாற்றில் குமார் பொன்னம்பலம் வகித்த வகிபாவம் மிக முக்கியமானது. அந்தப் போராட்டத்தின் இரட்டைக்கிளைகளான இராணுவம், அரசியல் என்ற இருபோக்குகளின் தென்பகுதியின் அரசியல் நெருக்கடிகளுக்குள் தமிழ் மக்களின் அரசியல் உரிமைக்காக தனி மனிதராக துணிந்து நின்று செயல்பட்டார்.

தமிழர் பிரச்சினையை பயங்கரவாதமாக சித்தரித்து, சர்வதேச அரங்கிலிருந்து தமிழினப் போராட்டத்தை ஓரம் கட்ட நினைத்த சிங்கள பௌத்த பேரினவாத சக்திகளுக்கு மத்தியில் அஞ்சா நெஞ்சத்துடன் போராடிய போராளியாக அவர் மிளிர்ந்தார்.

1990 ஆம் ஆண்டுகளில் தமிழ் மக்கள் மீதான அரச பயங்கரவாதம் அதிகரித்துக்கொண்டே வந்தபோது, குமார் பொன்னம்பலம் கொடுத்த தைரியத்தில் அவர் பின்னே பலர் அவருடன் இணைந்து செயற்பட்டிருந்தனர். மாமனிதர் குமார் பொன்னம்பலம் வடக்குகிழக்கு தமிழ் மக்கள் உள்ளிட்ட, தென்னிலங்கைத் தமிழ்மக்களுக்கும் கவச கேடயமாக விளங்கினார்.

இலங்கையின் மிகச்சிறந்த வழக்கறிஞராகத் திகழ்ந்த மாமனிதர் குமார் பொன்னம்பலம், மனிதஉரிமைகளுக்கும் தமிழினத்தின் மீதான ஒடுக்குமுறைகளுக்கும் எதிராக குரல் கொடுத்துக்கொண்டிருந்த போது – பலகோணங்களில் சிறிலங்கா அரசினதும், அரச ஒட்டுக்குழுக்களினதும் அச்சுறுத்தல்கள் இவரைச் சூழ்ந்துகொண்டன.

மிகச்சிறந்த சட்டவல்லுனரான குமார் பொன்னம்பலம் தமிழ்மொழி ஆங்கில மொழி மட்டுமன்றி சிங்கள மொழியிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்காக நீதிமன்றங்களிலும் தூள்கிளப்பினார்.

4ம் பக்கம்

# "மாமனிதரின் மறைவு" பிரபாகரன் இரங்கல்

வீரகேசரி நாளிலிருந்து 09.01.2000

**குமார் பொன்னம்பலம் அவர்கள் அரசியற் சுயநலன்களுக்கு அப்பாற்பட்ட ஒரு தனித்துவமான மனிதர். ஒரு புரட்சிகரமான அரசியல்வாதி. நேர்மையுடன் நெஞ்சுறுதியுடன் மனித நீதிக்காக குரலெழுப்பி வந்தவர். சிங்களத்தின் தலைநகரில் தனித்து நின்று சிங்களப் பேரினவாதத்திற்கு சவால்விடுத்து வந்தவர். ஆபத்துக்கள் சூழ்ந்திருந்தபோதும் அஞ்சா நெஞ்சத்துடன் அநீதியை எதிர்த்துப் போராடியவர்.**

---

சுட்டுக்கொல்லப்பட்டுள்ள அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரசின் தலைவர் குமார் பொன்னம்பலத்தின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அனுதாபச் செய்தியொன்றினை வன்னியில் விடுத்துள்ளார்.

அவரது கையொப்பம் இடப்பட்டு வெளியிடப்பட்டுள்ள அனுதாப அறிக்கையில் தாயக தேசத்தின் விடுதலையை தணியாத இலட்சியமாக வரித்து அந்த உன்னத இலட்சியத்திற்காக அரும்பணி ஆற்றி வந்த ஒரு அபூர்வமான மனிதரை நாம் இழந்துவிட்டோம். விடுதலைக்காக எரிந்துவந்த ஒரு இலட்சியச்சுடர் அணைந்துவிட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குமார் பொன்னம்பலம் அவர்களின் இனப் பற்றிற்கும் விடுதலைப்பற்றிற்கும் மதிப்பளித்து அவரது நற்பணியை கௌரவிக்கும் முகமாக மாமனிதர் என்ற அதியுயர் தேசிய விருதை அவருக்கு வழங்குவதில் நான் பெருமை அடைகின்றேன். உன்னத இலட்சியத்திற்காக வாழ்ந்த உயர்ந்த மனிதர்களை சாவு அழித்துவிடுவதில்லை. எமது தேசத்தின் ஆன்மாவில் அவர்களுக்கு என்றும் அழியாத இடமுண்டு என்றும் தெரிவிக்கப்பட்டுள்ள அவ் அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பகைவனின் கோழைத்தனத்திற்கு தமிழினப் பற்றாளர் ஒருவர் பலியாகிவிட்டார். குமார் பொன்னம்பலம் அவர்கள் அரசியற் சுயநலன்களுக்கு அப்பாற்பட்ட ஒரு தனித்துவமான மனிதர். ஒரு புரட்சிகரமான அரசியல்வாதி. நேர்மையுடன் நெஞ்சுறுதியுடன் மனித நீதிக்காக குரலெழுப்பி வந்தவர். சிங்களத்தின் தலைநகரில் தனித்து நின்று சிங்களப் பேரினவாதத்திற்கு சவால்விடுத்து வந்தவர். ஆபத்துக்கள் சூழ்ந்திருந்தபோதும் அஞ்சா நெஞ்சத்துடன் அநீதியை எதிர்த்துப் போராடியவர்.

பொன்னம்பலம் அவர்கள் ஒரு உயரிய தேசப்பற்றுள்ளவர். தமிழீழ தாயகத்தில் ஆழமான பாசம் கொண்டவர். தமிழர் தேசம் தன்னாட்சி உரிமைபெற்று சுதந்திர நாடாக உருவாக வேண்டுமென ஆவல் கொண்டவர். ஆயுதப் போராட்டம் வாயிலாகவே தமிழரின் விடுதலை சாத்தியமாகும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டவர். அதனால் பகிரங்கமாகவே எமது விடுதலை இயக்கத்தையும் எமது இயக்கத்தின் கொள்கையையும் ஆதரித்தார். எமது விடுதலைப் போராட்டத்தை நியாயப்படுத்தி உலக அரங்கில் குரல்கொடுத்து வந்தார். நேர்மைத்திறமையுடன் அபாரமான துணிச்சலுடன் அன்னார் ஆற்றிய அரும்பணி மிகவும் பாராட்டத்தக்கது.

"மாமனிதர் மறைவு" பிரபாகரன் இரங்கல்

சுட்டுக்கொல்லப்பட்டுள்ள அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரசின் தலைவர் குமார் பொன்னம்பலத்தின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அனுதாபச் செய்தியொன்றினை வன்னியில் விடுத்துள்ளார்.

அவரது கையொப்பம் இடப்பட்டு வெளியிடப்பட்டுள்ள அனுதாப அறிக்கையில் தாயக தேசத்தின் விடுதலையை தணியாத இலட்சியமாக வரித்து அந்த உன்னத இலட்சியத்திற்காக அரும்பணி ஆற்றி வந்த ஒரு அபூர்வமான மனிதரை நாம் இழந்துவிட்டோம். விடுதலைக்காக எரிந்துவந்த ஒரு இலட்சியச்சுடர் அணைந்துவிட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குமார் பொன்னம்பலம் அவர்களின் இனப் பற்றிற்கும் விடுதலைப்பற்றிற்கும் மதிப்பளித்து அவரது நற்பணியை கௌரவிக்கும் முகமாக 'மாமனிதர்' என்ற அதியுயர் தேசிய விருதை அவருக்கு வழங்குவதில் நான் பெருமை அடைகின்றேன். உன்னத இலட்சியத்துக்காக வாழ்ந்த உயர்ந்த மனிதர்களை சாவு அழித்துவிடுவதில்லை. எமது தேசத்தின் ஆன்மாவில் அவர்களுக்கு என்றும் அழியாத இடமுண்டு என்றும் தெரிவிக்கப்பட்டுள்ள அவ் அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பகைவனின் கோழைத்தனத்திற்கு தமிழினப் பற்றாளர் ஒருவர் பலியாகிவிட்டார்.

குமார் பொன்னம்பலம் அவர்கள் அரசியற் சுயநலன்களுக்கு அப்பாற்பட்ட ஒரு தனித்துவமான மனிதர். ஒரு புரட்சிகரமான அரசியல்வாதி. நேர்மையுடன் நெஞ்சுறுதியுடன் மனித நீதிக்காக குரலெழுப்பிவந்தவர். சிங்களத்தின் தலைநகரில் தனித்துநின்று சிங்களப்பேரினவாதத்திற்கு சவால்விடுத்து வந்தவர். ஆபத்துக்கள் சூழ்ந்திருந்தபோதும் அஞ்சா நெஞ்சத்துடன் அநீதியை எதிர்த்துப் போராடியவர்.

பொன்னம்பலம் அவர்கள் ஒரு உயரிய தேசப்பற்றுள்ளவர். தமிழீழ தாயகத்தில் ஆழமான பாசம்கொண்டவர். தமிழர் தேசம் தன்னாட்சி உரிமைபெற்று சுதந்திர நாடாக உருவாக வேண்டுமென ஆவல்கொண்டவர். ஆயுதப் போராட்டம் வாயிலாகவே தமிழரின் விடுதலை சாத்தியமாகும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டவர். அதனால் பகிரங்கமாகவே எமது விடுதலை இயக்கத்தையும் எமது இயக்கத்தின் கொள்கையையும் ஆதரித்தார். எமது விடுதலைப் போராட்டத்தை நியாயப்படுத்தி உலக அரங்கில் குரல்கொடுத்துவந்தார். நேர்மைத்திறமையுடன் அபாரமான துணிச்சலுடன் அன்னார் ஆற்றிய அரும்பணி மிகவும் பாராட்டத்தக்கது.

இது நம்தேசம்
தொடர்புகளுக்கான முகவரி : இல.43, 03ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
தொலைபேசி : 021 222 3739

# விழிப்பே விடுதலையின் முதற்படி!

ஜனவரி 05, 2000ம் ஆண்டு சிறிலங்கா அரச பயங்கரவாதத்தால் மாமனிதர் குமார் பொன்னம்பலம் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார். அவர் மறைவாற் துயருறும் ஓர் உலகினை அவர் விட்டுச் சென்றிருக்கின்றார். குமார் பொன்னம்பலம் என உலகறிந்த திரு.காசிநாதர் காங்கேசர் பொன்னம்பலம் அவர்கள் தன்னுடைய வாழ்வினைத் தமிழர் தம் உரிமைப்போராட்டத்திற்காய் அர்ப்பணித்த மாமனிதன்.

தமிழ்த் தேசியத்திற்கெதிரான சிங்களத்தலைமைகளின் எதிர்ப்புணர்வினையும் பிற்போக்குத் தனத்தையும் இனங்கண்டு கோடிட்டு வெளிக்காட்டும் பணியினையும் தனதாகக் கொண்டிருந்தார்.

மாமனிதர் குமார் அவர்கள் இயற்கையிலேயே ஒரு யதார்த்தவாதி என்பது மட்டுமல்ல, அதனைச் செயலிலும் காட்டியவர். திரைமறைவுச்சங்கதிகளில், ஒளிவு மறைவுச் செயற்பாடுகளில் நம்பிக் கொண்டிராதவர். பதிலாக எந்தப் பிரச்சினையையும் நேருக்கு நேர் முகம் கொடுத்துப் பழகியவர்.

மூத்த தமிழ்க்கட்சியான அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் தலைவராக இருந்தபோதும் தான் அரசியல் சதுரங்கமாட விரும்பாதவர், மேலும் தனது தலைமையின் கீழ் கட்சியினையும் கூட அரசியல் விளையாட்டுக்களில் ஈடுபட அனுமதிக்காதவர்.

தமிழ்த்தேசிய இனம் தனது வாழ்வோ சாவோ என போராடிக்கொண்டிருந்த காலகட்டத்தில் குமார் அவர்கள் நேர்மையையும் வெளிப்படையாக பேசுவதையுமே தனக்குப் பொருத்தமான ஆயுதமாகக் கொண்டிருந்தார். அந்த வகையில் அவற்றை எதிர்பார்க்க முடியாத வீரியத்துடன் பயன்படுத்தியவர் என்பது யாவரும் அறிந்த விடயம்.

தமிழ்த்தேசிய இனத்தின் பிரச்சினைக்கான தீர்வு "திம்பு" கோட்பாடுகளின் அடிப்படையிலேயே அமைய முடியும் என ஸ்திரமாக நம்பியவர்.

அதுவும்கூட, சிங்களத்தேசிய இனமானது ஒரு வகையான அரசமைப்பினை வரைகையில், திப்புக்கோட்பாடுகள் தமிழ்த்தேசிய இனத்தின் அடிப்படைக்கோரிக்கை என்பதனை அங்கீகரித்தால்த்தான் நடைமுறைச்சாத்தியமாகும் என நம்பினார். ஏனென்றால் திப்புக்கோட்பாடுகள் தமிழீழ விடுதலைப் புலிகளினால் மட்டுமல்ல, ஏனைய தமிழ்க் கட்சிகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதே.

திம்புவை அவர் அங்கீகரித்து வலியுறுத்தியதற்கு இரு காரணங்கள் உண்டு. ஒன்று, சிங்களத் தேசியமானது விசுவாசமாக தமிழ்த்தேசிய இனத்தின் நியாயமான அபிலாஷைகளை ஏற்றுக்கொள்ள முடியுமென்றால் மட்டுமே அப்படியான ஒரு தீர்வுத்திட்டத்தை வரையும் செயற்பாடுகளுக்கு முன் தமது விசுவாசமான நம்பிக்கையை வெளிப்படுத்த முடியும். அவ்விதமாக சிங்களத் தேசிய இனமானது முழு உலகிற்கும் தாம் தமிழினத்தின் அபிலாஷைகளைக் கொள்கையளவில் ஏற்றுக்கொள்வதை எடுத்துக் காட்டும் போதுதான், சிங்கள தேசிய இனமானது தாம் முழு உலகிற்கு எடுத்துக்காட்டியவாறு தமிழ்த் தேசிய இனத்தின் அபிலாஷைகளை செயல் வடிவில் தமது சொற்பிறழாது அமையப் போகும் அரசியலமைப்பில் பிரதிபலிக்கச் செய்ய முடியும் எனக் குமார் பொன்னம்பலம் நம்பினார்.

இரண்டாவதாக, தமிழ் மக்களின் நியாயமான அபிலாஷைகளை சிங்களத் தேசிய இனமானது என்றும் அங்கீகரிக்கப் போவதில்லை என்று அறிந்திருந்தார். ஆதலினாற்தான் எமது நியாயமான அபிலாஷைகளை வலியுறுத்துவதன் மூலம் சிங்களத் தேசியத்தின் பிற்போக்குத்தன்மையை உலகிற்கு வெளிக்காட்டலாம். அந்த வகையில் தீர்வுத்திட்டவரைவு என்று கூறிக்கொள்ளும் அவர்களின் பொய்மையை - பாசாங்குத்தனத்தை கோடிட்டுக்காட்டலாம் என நம்பினார். இன்றும்கூட அரசியலமைப்பு - தீர்வுத்திட்டம் எனும் பாலமாக அந்தப் பொய்மையும் பாசாங்குத்தனமுமே வெளிப்பாடாய் உள்ளது.

குமார் ஒரு யதார்த்தவாதியாக இருந்ததனாற்தான் அவர் சிங்களத்தலைமைகளின் எதிர்ப்புணர்வுகளையும், அதேவேளை கொழும்பில் இருக்கும் தமிழ்க்கட்சிகள், குறுகிய அரசியல் லாப நோக்குடையவையாய் இருப்பதையும் அறிந்து, தான் தமிழ் மக்களின் நியாயமான அபிலாஷைகளுக்காக அர்ப்பணிப்புடன் போராடும் ஒரே அமைப்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டத்தை அடையாளம் கண்டார். இதனை அவர் ஏற்றுக்கொண்டதை சிறிலங்காவின் உள்ளும் வெளியேயும் வெளிப்படையாக அறிவித்திருக்கின்றார்.

இவ்விதமாக அவர்கொண்டிருந்த அரசியல் நம்பிக்கையும், மேலும் மனிதஉரிமைவாதியாக அவர் ஆற்றிய பங்கும், தமிழ்மக்களின் அரசியல் உரிமைகள் – மனிதஉரிமைகள் சார்பாக அரசிற்கு சவாலாக அவர் அமைந்ததுமே, அவர் இப்படியான ஒரு மரணத்தை அடையக் காரணமாயிற்று.

ஒரு மனித உரிமைவாதியாக 1997 மற்றும் 1999 களில் ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழு முன்னும் 1998 இல் பெல்ஜியத்தில் பிறஸல்ஸில் ஐரோப்பிய பாராளுமன்றத்திலும் உரையாற்றியிருந்தார். பாடசாலை மாணவி கிருஷாந்தி குமாரசாமி பாலியற் சித்திரவதைக்கொலை வழக்கில் மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்களது பங்களிப்பு தமிழர் தாயகத்தில் சிறிலங்காவின் சிங்கள இராணுவத்தின் மனிதஉரிமை மீறல்கள், சித்திரவதைகள், பாலியற் கொலைகளையும், செம்மணி மனிதப்புதைகுழிகள் என்பவற்றையெல்லாம் முழு உலகிற்கும் எடுத்துக்காட்டிற்று.

இன்றைய நிலையை பார்க்கும் போது தமிழ் மக்களின் அபிலாசைகளை சிறிலங்கா அரசு மட்டுமல்ல, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஒற்றையாட்சிக்குள் முடக்கும் நிலைக்குத் துணிந்து விட்டமையானது, தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கான விடுதலைப்போராட்டித்தில் தம்மை விதையாக்கியவர்களுக்கும் மாமனிதர் குமார் பொன்னம்பலம் போன்றோருக்கும் செய்யும் பச்சைத் துரோகமாகும்.

2009 மே மாதம் 18ம் நாளின் பிற்பாடு, தமிழ் தேசியக் கூட்டமைப்புதடம்புரண்டுதமிழ்அரசியலை பிழையான திசைக்குக் கொண்டு செல்லப் போகின்றது என்ற விடயத்தை - குமார் பொன்னம்பலத்தின் வாரிசான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்திருந்த நிலையில் 2010 இல் கூட்டமைப்பிலிருந்து விலகி, கூட்டமைப்பின் தலைமைகளின் துரோகங்களை அவ்வப்போது வெளிப்படுத்தி வந்திருந்தார். அப்போதெல்லாம் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறிய உண்மைகளை ஊடகங்கள் இருட்டடிப்புச் செய்திருந்த போதும், காலப்போக்கில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சொல்லி வந்திருந்த - கூட்டமைப்பின் இரட்டைவேடத்தை மக்கள் புரிந்துகொள்ளும் அளவுக்கு சம்பவங்கள் நடைபெற்றன.

4ம் பக்கம்

**விழிப்பே விடுதலையின்...**

03ம் பக்க தொடர்ச்சி...

கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் அரசியல் இயக்கமாகிய தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியை தமிழ் மக்கள் அங்கீகரிக்கும் நிலை வருகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், அதைக் குழப்புவதற்காக – சிறிலங்கா அரசும் தமிழ் அரசியலைப் பாவிக்க விரும்பும் வல்லரசுகளும் ஒன்று சேர்ந்து, பல்வேறு தரப்புகளை இறங்கியிருக்கிறார்கள். அந்த வகையில் இன்று தமிழ் மக்களைத் திட்டமிட்டுக் குழப்பி, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமை வகிக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை மக்கள் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கக் கூடாது என்பதற்காக, அல்லது குழப்புவதற்காகவே பல்வேறு குழப்பங்களை விளைவிக்கக்கூடிய பல தரப்புக்களும் இறக்கிவிடப்பட்டுள்ளன.

தமிழ் தேசிய கூட்டமைப்பு அரசியல் மோசடி செய்ததாக தமிழ் மக்கள் கணிப்பிட்டுள்ள நிலையில், மக்கள் மாற்றத்தைத் தேடுகிறார்கள் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. அந்த மாற்றுத்தரப்பை தேடுகின்றபோது தென்னிலங்கையில் இருக்கின்ற கட்சிகள் கூட, மக்களுக்கு சலுகைகளைக் காட்டி – போலி நம்பிக்கைகளைக் கொடுத்து – கோடிக் கணக்கில் காசைக் கொட்டுவதற்கு தயார் என்று கூறி, தமிழ் மக்களது சரியான தேர்வை குழப்புவதற்கு நினைக்கிறார்கள். ஆனால் தென்னிலங்கைக் கட்சிகளினது இத்தகைய போலி நம்பிக்கைகள் அனைத்தும் இன்று தோற்றுப்போய், சிறிலங்கா மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் உள்ளாகியுள்ள நிலையில், தமிழ் மக்கள் தென்னிலங்கைக் கட்சிகளினதும், தமிழ் மக்களை ஏமாற்றி ஒற்றையாட்சிக்குள் முடக்க நினைக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் போன்ற முகவர் தரப்புக்களிடமிருந்தும் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதே தமிழ் மக்களின் இருப்பை உறுதிப்படுத்த உதவும். தமிழ் மக்கள் தமது அபிலாசைகள் தொடர்பாக தெளிவுடன் இருக்க வேண்டும். எனவே – தமிழ்த் தேசிய இனத்திற்கு மகத்தான சேவை செய்த – விசுவாசமான – தன்னுயிரையே தமிழ்த்தேசிய இனத்திற்காய் அர்ப்பணித்த மாமனிதனின் கனவை நனவாக்க உறுதிபூணுவோம்.

**மாமனிதர் குமார்...**

01ம் பக்க தொடர்ச்சி...

எந்த மொழியும் தமிழனை அடக்கியாள முடியாது என்பது போல தனது வாதத்திறமையை சிறிலங்காவின் நீதிமன்றங்களில் வெளிப்படுத்திவந்தார்.

தனித்துவமான தனது அரசியல் நிலைப்பாட்டின் மூலம் குமார் பொன்னம்பலம் தமிழினத்தின் குரலாக தன்னை உலகுக்கு வெளிக்காட்டினார். கொழும்பில் இருந்துகொண்டே துணிவாக சிங்கள ஆட்சியாளரின் அராஜகப்போக்கைக் கண்டித்த இவர், தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் நியாயத்தன்மையை உலகுக்கு வெளிப்படுத்திவந்தார்.

கொழும்பில் கைதான ஏராளமான தமிழர்களுக்கு அவர்களிடம் பணம் எதுவும் வாங்காமலேயே நீதிமன்றங்களில் வழக்காடி, பலரை சிறையிலிருந்து மீட்டெடுத்தார்.

1987 ஜனவரி 26,29,30ஆம் நாள்களில் 150இற்கு மேற்பட்ட தமிழ்மக்கள் அரசபடையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதையடுத்து அப்போது மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினராக இருந்த காலஞ்சென்ற மாமனிதர் யோசப் பரராஜசிங்கத்தின் வேண்டுதலையேற்று குமார் பொன்னம்பலம் நீதிமன்றில் ஆஜராகி பாதிக்கப்பட்ட உறவினர்களுக்காக வாதாடினார்.

1970இல் குடியியல் உரிமைகள் இயக்கத்தின் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவராக இருந்த மாமனிதர் குமார் பொன்னம்பலம், மனிதஉரிமைகளின் பால் ஆழமான ஈடுபாட்டைக்கொண்டிருந்தார். குடியியல் உரிமைகள் இயக்கக் கூட்டங்களில் அவர் கிரமம் தவறாமல் பங்குபற்றியதுடன் சீரிய சிந்தனையுடன் பயனுள்ளமுறையில் தமது பங்களிப்புகளையும் செய்தார்.

குடியியல் உரிமைகள் இயக்கத்தின் அந்த ஆரம்பநாட்களில் மனிதஉரிமை மீறல்களுக்குப் பலியான சிங்கள இளைஞர்களுக்கெதிரான வழக்குகளிலும் கூட கட்டணம் எதுவுமின்றி அவர்களுக்காக வாதாடினார். பிரபல்யம் பெற்ற “தர்மசேகர” சம்பவத்தின் காரணமாக – அமெரிக்கத்தூதரகத்துக்கு வெளியே நடைபெற்ற ஆர்ப்பாட்டமொன்றில் கொல்லப்பட்ட ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் தொடர்பான ஒரு சிக்கல் நிறைந்த வழக்கில் அவருக்கு கிடைத்த வெற்றி அவரின் ஆரம்பகால வெற்றிகளில் ஒன்றாகும்.

தமிழர் அரசியல்பரப்பில் தமிழர்களின் நியாயப்பாடுகளை சர்வதேச அரங்குகளுக்கு எடுத்துசென்று – பரப்புரை செய்ய தமிழ் அரசியல்வாதிகள் தயக்கம் காட்டிய வேளையில் – தனது சொந்த நலன்களைத் துறந்து – சர்வதேச அரங்குகளில், சிறிலங்காவின் இனப்பிரச்சினையின் தோற்றுவாயையும், அதனால் தமிழர்கள் அனுபவித்துவரும் இன்னல்களையும், மனிதஉரிமைகள் மீறப்படுகின்ற சம்பவங்களையும் நன்கு எடுத்துக்கூறி ஈழத்தமிழர்களின் போராட்டத்துக்கு கணிசமான ஆதரவை தேடித்தர முயன்றிருந்தார்.

இதனால் – சிறிலங்காவின் சிங்களப்பேரினவாதிகளதும் இனவாத ஆட்சியாளர்களினதும், வெறுப்புக்கும், கசப்புக்கும் ஆளாகியிருந்தார். இவரது வெளிப்படையான பேச்சுக்களை, கருத்துக்களை, ஜீரணிக்கமுடியாத சிறிலங்காவின் அரச பயங்கரவாதம் இவரது வீட்டுக்கு கைக்குண்டைவீசி இவரை அச்சுறுத்தியிருந்தது.

தமிழன் தன்மானத்துடன் வாழவேண்டுமானால் சிங்கள அரசுக்கு ஆலவட்டம் பிடிக்காமல் , இனத்துக்காக போராடியேயாக வேண்டும் என்ற கொள்கைப் பிடிப்புடன் – தீவிரமான தமிழ் அரசியல் தலைவராக செயற்பட்டுவந்தார். தமிழீழ விடுதலைப்புலிகளின் தீவிர ஆதரவாளர் என தென்னிலங்கை அரசியல்வாதிகள் பலரும் இவர்மீது முத்திரை குத்தினர்.

இவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல், ‘தமிழன் தலை நிமிர்ந்து வாழவேண்டும் என்பதே எனது கொள்கை. அதற்காக உரிமைப்போராட்டம் எந்த ரூபத்தில் நடந்தாலும் அங்கே நானிருப்பேன்’ என்று கூறிய மாமனிதர் குமார் பொன்னம்பலம், இனவாதி என்று தனக்கெதிராக பரப்புரை செய்தோருக்கு சாட்டையடி கொடுத்து தனது கொள்கை உறுதிப்பாட்டை வெளிக்காட்டியவர்.

தமிழ்த்தேசிய இனத்தை அடக்கி ஒடுக்குவதற்காக, இனவழிப்பை நோக்கமாகக் கொண்டு – முழு இராணுவபலத்தையும் முரட்டுத்தனமாகப் பயன்படுத்திய சிங்கள மேலாதிக்க அரசை அவர் கண்டித்தார். தமிழ்பேசும் இனத்தை – சிறிலங்கா அரச பயங்கரவாதம் அடக்கி ஒடுக்குவதை – பொறுக்கமுடியாத காரணத்தால் – தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவான தனது கொள்கையிலிருந்து என்றும் பின்வாங்கப் போவதில்லை என்று கூறி – அடிபணியாது – சிங்களத்தின் கோட்டைக்குள் நின்று கர்ஜித்தார்.

எந்தவொரு ஆயுதமுமின்றி தனிமனிதனாக நின்று – தமிழ் மக்களுக்காகவும், தமிழின விடுதலைக்காகவும் புரட்சிகர வழியில் போராடியவர்களுக்காகவும் குரல் கொடுத்து, ஜனநாயக வழியில் களமாடிய மாமனிதரை தமிழினம் எப்படி மறக்கமுடியும்?

தமிழ்த்தேசத்தின் உரிமைக்காக தன்னை அர்ப்பணித்து சர்வதேசமெங்கும் சென்று, சந்திரிகா அரசின் தமிழின விரோதசெயல்களையும், தமிழினப் படுகொலைகளையும் அரசியல் கபடத்தனங்களையும் பகிரங்கமாக வெளிக்கொணர்ந்து – தமிழர்தம் நிலையை எடுத்துரைத்த ஒரே காரணத்துக்காகவே மாமனிதர் குமார் பொன்னம்பலம் படுகொலை செய்யப்பட்டிருந்தார். குமார் பொன்னம்பலம் என்ற சத்தியவாதியின் குரல் அநியாயமான முறையில் கோழைத்தனமாக ஒழிக்கப்பட்டது. இன்று உலகம் முழுதும் பரந்து வாழும் தமிழர் மனங்களில் பேரிழப்பாகவே இன்றுவரை பார்க்கப்படுகின்றது.

மாமனிதர் குமார் பொன்னம்பலம் எந்தக் கொள்கையை நெஞ்சில் சுமந்து போராடினாரோ அக்கொள்கையை அவரின் இலட்சியக்கனவு நிச்சயம் நிறைவேற வேண்டும்.

**25.12.2022 அன்று மாமனிதர் யோசப் பரராஜசிங்கம் அவர்களது 17ம் ஆண்டு நினைவு நாளையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.**

# பகைவனின் கோழைத்தனத்திற்கு பலியாகிய மாமனிதர் ஜோசப்

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், மனித உரிமைகள் செயற்பாட்டாளருமான மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம் அவர்கள் 25.12.2005 அன்று மட்டக்களப்பு நகரில் அமைந்துள்ள சென் மேரிஸ் தேவாலயத்தில் நத்தார் ஆராதனைகளில் கலந்துகொண்டிருந்த போது சிறிலங்கா – பௌத்த – சிங்கள அரச பயங்கரவாதத்தின் துணைக்குழுவாக இயங்கிய கருணா – பிள்ளையான் குழுவினரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம் அவர்கள் 1934 நவம்பர் 26ம் திகதி பிறந்தார். ஆரம்பத்தில் அரச ஊழியராக பணிபுரிந்த அவர் பின்னர் பத்திரிகைத் துறையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். கிழக்கு மாகாணத்தில் சிறிலங்கா அரச பயங்கரவாதத்தால் மேற்கொள்ளப்படும் இனப்படுகொலைகள், நில ஆக்கிரமிப்புகள் மற்றும் சிங்களக் குடியேற்றங்கள் தொடர்பில் அவர் தனது எழுத்துகள் வாயிலாக அவற்றை வெளியுலகிற்கு தெரியப்படுத்தி வந்தார்.

1991 ஜுன் 12ம் திகதி மகிழடித்தீவில் இடம்பெற்ற படுகொலையை சர்வதேச ரீதியாக வெளிக்காட்டியது மட்டுமன்றி, அதற்கான ஒரு ஆணைக்குழுவை இலங்கை அரசாங்கத்தால் அமைப்பதற்கு அழுத்தம் கொடுத்தவரும் இவரே. அத்துடன் 1996இல் யாழ்ப்பாணம் கைதடியில் பாடசாலை மாணவியான கிருசாந்தி கொலை தொடர்பாக பி.பி.சி ஊடாக சர்வதேசத்திற்கு தெரிவித்தவரும் இவரே. இவை ஒரு சில உதாரணங்கள் மட்டுமேயாகும்.

2004இல் கருணா – பிள்ளையான் குழு சிறிலங்கா அரசின் துணைக்குழுவாக இயங்க ஆரம்பித்ததுடன், மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம் அவர்களை தங்களுடன் இணைந்து செயற்படுமாறு வற்புறுத்தியிருந்தனர். ஆனால் அவர்களின் மிரட்டல்களுக்கு அடிபணியாத அவர் தொடர்ந்தும் தமிழ் மக்களின் விடுதலைக்காக பணியாற்றிவந்தார். இதனால் சிறிலங்கா அரசபயங்கரவாதத்தினால் அவர் குறிவைக்கப்பட்டார்.

அதன்படி 2005 டிசம்பர் 25ம் திகதி மட்டக்களப்பு சென் மேரிஸ் தேவாலயத்தில் நத்தார் ஆராதனைகளில் கலந்துகொண்டிருந்த போது நள்ளிரவில் கருணா – பிள்ளையான் குழுவினரால் சுட்டுக்கொல்லப்பட்டார். இச்சம்பவத்தின் போது அவரின் மனைவி மற்றும் 7 பேர் காயமடைந்திருந்தனர்.

மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம் அவர்களின் கொலை தொடர்பாக 10 வருடங்களின் பின் ஒப்புக்கு விசாரணைகளை ஆரம்பித்த சிறிலங்கா குற்றப்புலனாய்வுத் திணைக்களம், முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சர் பிள்ளையான், பிள்ளையானின் கட்சியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான "பிரதீப் மாஸ்டர்" என அழைக்கப்படும் எட்வின் சில்வா கிருஸ்ணானந்த ராஜா, "கஜன் மாமா" எனப்படும் கனகநாயகம் மற்றும் இராணுவப்புலனாய்வு உத்தியோகத்தர் எம். கலீல், முன்னாள் இராணுவ சிப்பாயான மதுசங்க ஆகியோரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

2021ம் ஆண்டு இக்கொலை வழக்கு நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது சட்ட மாஅதிபர் சார்பில் ஆஜரான அரச தரப்பு சிரேஷ்ட சட்டத்தரணி, இந்த வழக்கில் தொடர்ந்து சாட்சிகளை முற்படுத்தி நெறிப்படுத்த தேவையில்லை எனவும், இவ்வழக்கை தொடர்ந்தும் முன்னெடுக்க சட்டமாஅதிபர் திணைக்களம் எதிர்பார்க்கவில்லையெனவும் நீதிமன்றில் தெரிவித்ததையடுத்து, குறித்த வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டு, குறித்த சந்தேகநபர்கள் ஐவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

ஈழத்தமிழர்களின் மனிதவுரிமைக் காவலனாக சர்வதேச அரங்கில் மிகவும் துணிவுடன் ஓங்கி ஒலித்த தமிழ் மக்கள் பிரதிநிதியொருவரின் குரல், இறை வழிபாட்டுத் தலமொன்றில் வைத்து சிறிலங்கா அரச படைகளின் ஆயுததாரிகளால் படுகொலை செய்யப்பட்டமையானது, இந்த தேசத்தில் ஜனநாயகத்திற்கும் மனித உரிமைக்கும் எத்தகைய இடம் உண்டு என்பதை எடுத்துரைக்கிறது.

கொலை செய்யச் சொன்னவர்களும், செய்தவர்களும் இன்னும் இலங்கையில் சுதந்திரமாகவே நடமாடிக்கொண்டு இருக்கிறார்கள்.

மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலை என்பது, இனப்படுகொலையின் ஒரு வடிவமாகவே அமைந்துள்ளது. அந்தவகையில் அவருக்கும், தமிழ்த்தேசத்திற்கும் நாங்கள் செய்ய வேண்டிய வரலாற்றுக் கடமையாக ஈழத்தில் நடந்த இனப் படுகொலைக்கு நீதி கேட்கின்ற அந்த வரலாற்றுக் கடமையை தொடர்ந்தும் முன்னெடுப்போம்.



- ரவி -

# திருமலை – 05 மாணவர் படுகொலை!

## சிங்கள அரச பயங்கரவாதத்தின் கோரமுகம்

**02.01.2006அன்று திருகோணமலை கடற்கரையில் வைத்து 05 அப்பாவித் தமிழ் மாணவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதன் 16ம் ஆண்டு நினைவுநாளையொட்டி இந்த உண்மைச் சம்பவத்தின் சாட்சியங்கள் பதிவு செய்யப்படுகின்றது.**

திருகோணமலை காந்தி சிலையை அண்மித்துள்ள கடற்கரைப் பகுதியானது மாலை வேளைகளில் பலர் பொழுதுபோக்கிற்காக ஒன்றுகூடும் ஒரு பிரபல்யமான பகுதியாகும். அப்பகுதியிலுள்ள கோட்டையில் சிறிலங்கா இராணுவ தலைமையகம் அமைந்திருந்ததுடன்,

அப்பகுதியில் சிறிலங்கா இராணுவம், பொலிஸ் மற்றும் கடற்படையின் சோதனைச் சாவடிகளும் அமைந்திருந்தன. அவ்வாறு 100 மீற்றர் சுற்றளவில் 04 சோதனைச் சாவடிகள் அமைந்திருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

அவ்வாறுதான் 02.01.2006அன்று மாலையும் அப்பகுதியில் தங்கள் க.பொ.த உயர்தரப் பரீட்சைகளை முடித்துவிட்டு பல்கலைக்கழக அனுமதியை எதிர்பார்த்து காத்திருந்த 07 மாணவர்கள் அடங்கிய குழுவொன்றும் தங்கள் பொழுதைக் கழித்துக் கொண்டிருந்தனர். மாலை 07.35 மணியளவில் வீதியால் பச்சை நிற முச்சக்கரவண்டியில் வந்த சிலர் கடற்கரையில் இருந்த மாணவர்களை நோக்கி கைக்குண்டை எறிந்தனர். அது வெடித்ததில் அங்குநின்ற மாணவர்களில் 05 பேர் வரையானோர் காயமடைந்தனர்.

"நாங்கள் நின்று கதைத்துக்கொண்டிருந்தோம். அப்போது எங்களை நோக்கி கைக்குண்டொன்று வீசப்பட்டது. அது எனது காலுக்கு அருகில் விழுந்ததை உணர்ந்தேன். உடனடியாக அங்கிருந்து தெற்குபக்கம் நோக்கி ஒரு சில மீற்றர் ஓடியிருப்பேன். அப்போது அக்குண்டு வெடித்தது. அதில் காயமடைந்த நான் நிலத்தில் விழுந்தேன். என்னுடன் மேலும் 4 பேர் காயமடைந்திருப்பார்கள் என நினைக்கிறேன். அந்த முச்சக்கரவண்டி சிலநூறு மீற்றர்கள் தூரத்திலிருந்த விகாரையின் அருகில் அமைக்கப்பட்டிருந்த சிறிலங்கா இராணுவம் மற்றும் பொலிஸ் சோதனைச் சாவடியைத் தாண்டி கோட்டை இராணுவ முகாமிற்குள் சென்றது" என இச்சம்பவத்தில் காயமடைந்து உயிர்தப்பிய இருவர்களில் ஒருவரான யோகநாதன் பூங்குழலோன் தனது அனுபவத்தை தெரிவித்திருந்தார்.

காயமடைந்தவர்கள் அப்பகுதியில் உதவியைத் தேடினார்கள். அந்த முச்சக்கரவண்டி, சோதனைச் சாவடியைக் கடந்ததும் அங்கிருந்த சிறிலங்கா கடற்படையினர் அப்பகுதிக்கு வரும் அனைத்து வீதிகளையும் மூடி, அப்பகுதிக்கு யாரும் செல்ல முடியாதவாறு தடைசெய்தனர். சில நிமிடங்களில் அப்பகுதிக்கு சாம்பல் நிற பிக்கப் வாகனத்தில் 10 – 15 சிறிலங்கா விசேட அதிரடிப்படையினர் வருகை தந்தனர். அவர்கள் தங்கள் துப்பாக்கிகளால் அங்கிருந்த



மாணவர்களை தாக்கத் தொடங்கினார்கள்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்ட மாணவர்களில் ஒருவரான ரஜீகரின் தந்தையான வைத்தியர் மனோகரன் தனது அனுபவத்தை பின்வருமாறு விபரிக்கிறார் "எங்களது வீடு சம்பவம் நடந்த இடத்திலிருந்து சில நூறு மீற்றர் தூரத்தில் சென் மேரிஸ் வீதியில் அமைந்திருந்தது. அப்போது பிள்ளையார் கதை விரதம் நடந்துகொண்டிருந்த காலப்பகுதி. 02.01.2006அன்று மாலை 06.00மணியளவில் எனது மகன் ரஜீகர் அருகிலிருக்கும் பிள்ளையார் கோவிலுக்கு செல்வதாக எனது மனைவியிடம் கூறிவிட்டு வீட்டிலிருந்து புறப்பட்டார்.

மாலை 7.35 மணியளவில் நான் வீட்டிலிருந்த போது ஒரு வெடிச்சத்தம் கேட்டது. நான் சில வருடங்கள் யாழ்ப்பாணத்தில் பணிபுரிந்தமையினால் என்னால் குண்டுவெடிக்கும் சத்தம், துப்பாக்கி வேட்டுச்சத்தம் மற்றும் வெடிச்சத்தம் என்பனவற்றை வேறுபடுத்தியறியமுடிந்தது. அது குண்டு வெடிக்கும் சத்தம் தான் என்பதை உணர்ந்துகொண்டேன்.

அச்சத்தம் கேட்டு ஐந்து நிமிடங்களில் எனது ஏனைய இரு மகன்களும் உடனடியாக வீட்டிற்கு திரும்பிவிட்டனர். ரஜீகர் வீட்டிற்குத் திரும்பவில்லை. அவர் கைத்தொலைபேசி வைத்திருந்தார். சில நிமிடங்களில் அவரது கைத்தொலைபேசியிலிருந்து எனது கைத்தெலைபேசிக்கு அழைப்பெடுத்த எனது மகன் "அப்பா எங்களைச் சுற்றி ஆமி நிற்கிறது" எனச் சொன்னார். எனது வீட்டிலிருந்து 300 - 500 மீற்றர்

தொலைவிலிருந்த கடற்கரைப் பகுதியிலேயே எனது மகன் மற்றும் நண்பர்கள் ஒன்றுகூடும் வழமையான பகுதி என்பது எனக்குத் தெரிந்திருந்ததால் நான் உடனடியாக எனது ஸ்கூட்டர் மோட்டார் சைக்கிளில் அவ்விடத்தை நோக்கிபுறப்பட்டேன்.




வெலிக்கடை தியாகிகள் நினைவு மண்டபத்திற்கு அருகிலிருந்த சிறிலங்கா கடற்படையின் சோதனைச் சாவடியிலிருந்து 03 கொமாண்டோ சீருடையணிந்த படையினர் என்னை மறித்தார்கள். நான் வைத்தியர் என்பதால் எனது ஸ்கூட்டரின் முன்பு வைத்தியர் என்பதைக் குறிக்கும் வகையில் சிவப்புக்கலரில் சின்னம் ஒட்டப்பட்டிருந்ததை பார்த்த படையினரில் ஒருவன் "நீங்கள் வைத்தியரா?" என என்னிடம் கேட்டான். நான் "ஆம்" என பதிலளித்தேன். எனது அடையாள அட்டையைக் காட்டிவிட்டு நான் சோதனைச் சாவடியைக் கடந்து உள்ளே செல்ல வேண்டும் என்று கூறினேன். "ஏன் உள்ளே போகவேண்டும்" என படையினர் கேட்டார்கள். "எனது மகன் உள்ளே நிற்கிறார். அவரது தொலைபேசியும் இயங்கவில்லை" என்று சொன்னேன். அவர்கள் என்னை உள்ளேவிட மறுத்துவிட்டார்கள்.

நான் அதில் நின்று உள்ளே பார்த்தேன். இருட்டினால் என்னால் 50 - 75 மீற்றர்கள் வரையான தூரத்தையே பார்க்கமுடிந்தது. அங்கு படையினரே நின்றிருந்தனர். மக்களின் நடமாட்டத்தைக் காணமுடியவில்லை. ஒரு வான் மற்றும் 03 முச்சக்கரவண்டிகள் மட்டும் அங்கு நின்றன. அத்துடன் காந்தி சிலையடியில் அமைக்கப்பட்டிருந்த மின்விளக்குகள் அனைத்தும் நிறுத்தப்பட்டிருந்தன. ஆனால் அப்போது மின்வெட்டு இருக்கவில்லை. எனது வீடு மற்றும் அயலில் மின்சாரம் இருந்தது.

அச்சமயம் கோட்டைப்பகுதியிலிருந்து ஒரு கரும் நிறமுடைய ஜீப் வந்துகொண்டிருந்தது. அதனுடைய parking lights மட்டுமே போடப்பட்டிருந்தது. பிரதான லைட்கள் நிறுத்தப்பட்டிருந்தது. கோட்டை வீதியால் வந்த அந்த ஜீப் U-turnஇல் திரும்பி காந்தி சிலையின் முன்பாக நிறுத்தப்பட்டது. அப்போது "காப்பாற்றுங்கள் காப்பாற்றுங்கள்" என இளைஞர்கள் சிலர் கத்தும் சத்தம் எனக்கு கேட்டது. என்னை உள்ளே செல்ல அனுமதிக்குமாறு நான் சோதனைச் சாவடியிலிருந்த படையினரிடம் கேட்டேன். அவர்கள் அதனை மறுத்துவிட்டனர். அப்பகுதியிலிருந்த வள்ளுவர் சிலையடியில் சாம்பல் நிற பிக்கப் நிற வாகனமொன்று நிறுத்தப்பட்டிருந்தது. அப்பகுதியில் வீதி விளக்குகள் போடப்பட்டிருந்ததால் என்னால் அதனை தெளிவாக அவதானிக்க முடிந்தது. நான் சோதனைச்சாவடியிலிருந்த படையினரிடம் என்னை உள்ளே விடுமாறு தொடர்ந்து கேட்டுக்கொண்டிருந்தேன்.

சில நிமிடங்களில் துப்பாக்கிச்சூடு நடாத்தப்பட்டது. அது நிலத்தை நோக்கியே சுடப்பட்டது என்பதை துப்பாக்கியிலிருந்து வெளிவந்த தீப்பொறி மூலம் உணர்ந்துகொண்டேன். துப்பாக்கிச்சூடு நடாத்தப்பட்டு சில நிமிடங்களில் அங்கு நின்ற ஜீப் கோட்டை வீதியில் கோட்டையின் திசை நோக்கிச் சென்றது. அவ்வாகனம் சென்றதும் படையினரின் ட்ரக் வாகனம் மற்றும் ஜீப்பொன்றும் நான் நின்றிருந்த இடத்தை தாண்டி உள்ளே சென்றது. அத்துடன் சிறிலங்கா இராணுவ மோட்டார் சைக்கிள் படையணியும் உள்ளே சென்றது. 15 வரையிலான மோட்டார் சைக்கிள்களில் தலா இரு படையினர் வீதம் சென்றனர்.

என்னை உள்ளே செல்ல படையினர் தொடர்ந்து மறுத்துவந்தனர். "உள்ளே என்ன நடக்கிறது என்பதையாவது சொல்லுங்கள்" என கேட்டேன். 5 நிமிடங்கள் கழித்து "உள்ளே நடந்த துப்பாக்கிச்சூட்டில் 5 பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள், இருவர் காயமடைந்திருக்கிறார்கள்" என பதில் சொன்னார்கள். அங்கு நிறுத்தப்பட்டிருந்த சாம்பல் நிற பிக்கப் வாகனத்தில் 6 அல்லது 7 இராணுவத்தினர் பின்பகுதியில் இருந்துசெல்வதை அவதானித்தேன். அவர்கள் அனைவரும் கறுப்புத்துணியால் தங்கள் முகத்தை மூடியிருந்தனர். அவர்களின் கண் மட்டுமே வெளியே தெரிந்தது. அது எஸ்.பி கபில ஜெயசேகரவின் வாகனம் என்பதை நான் பின் அறிந்துகொண்டேன். பிக்கப் சென்றபின் சோதனைச் சாவடியிலிருந்த படையினர் "இப்பகுதி கிளியர் செய்யப்பட்டிருக்கிறது. நீங்கள் இப்போது உள்ளே செல்லாம். ஆனால் உள்ளே யாரும் இல்லை நீங்கள் வைத்தியசாலைக்கு சென்றுபாருங்கள்" எனச் சொன்னார்கள்.

நான் உடனடியாக வைத்தியசாலைக்கு சென்றேன். அங்கு வாசலில் படையினர் மற்றும் பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தார். அங்கும் என்னை உள்ளே செல்ல அவர்கள் அனுமதிக்கவில்லை. நான் ஒரு வைத்தியர் எனச் சொன்னபின்பும் எனக்கான அனுமதி மறுக்கப்பட்டது. அதன்பின்னர் வைத்தியசாலைக்குள் நின்ற தாதி ஒருவரின் முயற்சியின் மூலம் உள்ளே செல்ல முடிந்தது. நான் அவசர சிகிச்சைப் பிரிவிற்குள் சென்று பார்த்தேன். அங்கு காயமடைந்த இருவருக்கு சிகிச்சை வழங்கப்பட்டுக்கொண்டிருந்தது. அதில் எனது மகன் இல்லை. பிணவறையிலும் சில உடல்கள் இருப்பதாகவும் அங்கே சென்று பார்ப்போமென அந்த தாதி கூறியதையடுத்து நான் அங்கே சென்று பார்த்தேன். அங்கு எனது மகனின் சடலம் வைக்கப்பட்டிருந்தது. அவரது தலையின் பின்புறமாக துப்பாக்கியால் சுடப்பட்ட 2 - 2.5 இன்ச் அளவுள்ள காயம் இருந்தது. அதிகளவான இரத்தம் வெளியேறியிருந்தது. எனது மகனின் ஜீன்ஸ் பொக்கற்றுகள் வெளியே இழுக்கப்பட்ட

8ம் பக்கம்

**திருமலை – 5 மாணவர்...** 07ம்பக்க தொடர்ச்சி...



நிலையிலிருந்தது. அவரது பணப்பை, அதற்குள் இருந்த பணம், அடையாள அட்டை மற்றும் அவர் அணிந்திருந்த சங்கலி என்பன அங்கு இருக்கவில்லை. நான் எனது மகனின் கைத்தொலைபேசிக்கு அழைப்பை ஏற்படுத்தினேன். அது vibrate modeஇற்கு மாற்றப்பட்ட நிலையில் அவரது ஜீன்ஸின் பின் பொக்கற்றில் இருந்தது.

அப்போது 3 பொலிஸாரும், முகங்களைக் கட்டியிருந்த நிலையில் 6 அல்லது 7 இராணுவத்தினர் என்னிடம் வந்து கொல்லப்பட்ட எனது மகன் ஒரு புலிப்போராளி என்றும், குண்டு வெடித்ததால் தான் அவர் இறந்தாரென்றும் ஆவணமொன்றில் உறுதிப்படுத்தி கையெழுத்திடுமாறு வற்புறுத்தினார்கள். கையெழுத்திட்டால் மட்டுமே சடலங்களை பெற்றோர்களிடம் கொடுக்கமுடியுமெனவும் மிரட்டினார்கள். நான் அவர்களின் மிரட்டலுக்கு அடிபணியாமல் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பிரதிநிதியை அழைத்துவந்தேன். அவர் அங்கிருந்த சடலங்களை பார்வையிட்ட பின் அவை துப்பாக்கியால் சுடப்பட்டதால் ஏற்பட்ட மரணம் தான் என்பதை உறுதிசெய்துகொண்டார். அத்துடன் நான் சடலங்களை எனது கைத்தொலைபேசியில் புகைப்படமும் எடுத்துக்கொண்டேன். அதன்பின் எனது வீட்டாருக்கு தகவல் தெரிவித்துவிட்டு சம்பவம் நடைபெற்ற இடத்திற்குச் சென்று பார்வையிட்டேன். தடயங்களை சேகரிப்பதற்கான எதுவித முயற்சிகளையும் பொலிஸாரோ இராணுவத்தினரோ எடுக்கவில்லை" என ரஜீகரின் அதந்தையார் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் புலிப்பயங்கரவாதிகள் ஐவர் சுட்டுக்கொல்லப்பட்டனர் என்ற செய்தியை சிறிலங்கா அரச பயங்கரவாதமானது தங்களது ஊதுகுழல் ஊடகங்கள் மூலம் பரப்ப முயற்சித்தது. ஆனால் ஊடகவியலாளரான சுகிர்தராஜன் அவர்கள் நடந்த சம்பவங்களை புகைப்பட ஆதாரங்களுடன் வெளிப்படுத்தியிருந்தார். ஐவரும் திட்டமிட்டு கொல்லப்பட்டனர் என்பதை அவரது செய்தி வெளியுலகிற்கு தெரியப்படுத்தியிருந்தது. அத்துடன் பௌத்த சிங்கள பிக்குவான நந்தரத்ன தேரரும் குறித்த மாணவர் படுகொலைக்கு நீதி கிடைக்கவேண்டுமென தொடர்ச்சியாக வலியுறுத்திவந்தார்.

அந்நிலையில் தான் 24.01.2006 அன்றுஊடகவியலாளரானசுகிர்தராஜன்சுட்டுக்கொல்லப்பட்டார். அதன் தொடர்ச்சியாக இச்சம்பவங்களை நேரில் பார்த்த மற்றொரு சாட்சியான முச்சக்கரவண்டிச் சாரதியொருவரும் சுட்டுக் கொல்லப்பட்டார். பின் 2007 மே மாத நடுப்பகுதியில் நந்தரத்ன தேரரும் சுட்டுக் கொல்லப்பட்டார். நீதிமன்ற விசாரணைகளில் கொல்லப்பட்ட 5 மாணவர்களில் ஒருவரான ரஜீகரின் தந்தை மனோகர், இக்கொலைகளை சிறிலங்கா அரசபடைகள் தான் செய்தன என்பதற்கான ஆதாரங்களை நீதிமன்றங்களில் தெரிவித்திருந்தார். அதன்பின் அவர் மீதும், அவரது குடும்பத்தினர் மீதும் தொலைபேசி ஊடாகவும், கடிதங்கள் ஊடாகவும் தொடர்ச்சியாக கொலை மிரட்டல்கள் விடுக்கப்பட்டு வந்தநிலையில் அவர்கள் குடும்பத்துடன் வெளிநாடொன்றிற்கு புகலிடம் தேடிச்சென்றுவிட்டனர்.

மனித உரிமைகள் அமைப்புகளின் அழுத்தம் காரணமாக ஒப்புக்கு விசாரணைகளை ஆரம்பித்த சிறிலங்கா அரசு இக்கொலைச் சம்பவம் தொடர்பாக 2013ம் ஆண்டில் 13 பொலிஸாரை கைது செய்து வழக்குத்தாக்கல் செய்தது. வழக்குகள் 6 வருடமாக நடந்துவந்த நிலையில் பலர் சிறிலங்கா அரசபடைகள் தான் இக்கொலையை செய்ததாக நீதிமன்றில் தெரிவித்தும், சாட்சிகள் இல்லையெனக்கூறி யூலை 03, 2019அன்று கைது செய்யப்பட்ட அனைவரும் நீதிமன்றால் விடுதலை செய்யப்பட்டனர்.

இக்கொலைகளின் பிரதான சூத்திரதாரியாக குற்றம் சாட்டப்பட்ட கபில ஜெயசேகர கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களின் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

புலம்பெயர்ந்துசென்றாலும்திரு. மனோகரன்அவர்கள் தனது மகனின் கொலைக்காகவும், ஏனைய மாணவர்களின் கொலைக்காகவும் தொடர்ந்தும் போராடி வருகின்றார். உள்ளூர் நீதிமன்றங்கள் மூலம் நீதியைப் பெறமுடியாதெனவும், சர்வதேச நீதிப்பொறிமுறையே இவர்களுக்கான நீதியைப் பெற்றுத்தருமெனவும் அவர் தொடர்ந்தும் வலியுறுத்திவருகின்றார்.

**இனப்படுகொலையின் ஒரு அங்கமாகவே இக்கொலைகள் அமைந்திருக்கின்றது. அந்தவகையில் கொல்லப்பட்டவர்களுக்கும், தமிழ்த் தேசத்திற்கும் நாங்கள் செய்யவேண்டிய வரலாற்றுக் கடமையாக ஈழத்தில் நடந்த இனப்படுகொலைக்கு நீதி கேட்கின்ற அந்த வரலாற்றுக் கடமையை தொடர்ந்தும் முன்கொண்டு செல்வோம்!**

- ரவி -

**02.01.2007அன்று மன்னார் மாவட்டத்தின் படகுத்துறை கிராமம் மீது சிறிலங்கா விமானப்படை நடாத்திய தாக்குதலில் கொல்லப்பட்ட 15 அப்பாவித் தமிழர்களின் 15ம் வருட நினைவையொட்டி இவ் உண்மைச் சம்பவம் பதிவு செய்யப்படுகின்றது!**

மன்னார் மாவட்டத்தில் மன்னாரின் நகரிற்கு வடகிழக்கே சுமார் 25 கிலோமீற்றர்கள் தொலைவில் தமிழீழ நிழலரசின் ஆளுகைக்குட்பட்டிருந்த கடலோரக் கிராமம் தான் படகுத்துறை.

வைத்தியசாலையிலிருந்து வந்த நோயாளர்காவு வண்டிகள் உயிலங்குளம் சோதனைச் சாவடியில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினரால் திருப்பி அனுப்பப்பட்டனர். இதனால் காயமடைந்தவர்கள் சம்பவ இடத்திலிருந்து 80 கிலோமீற்றர் தொலைவிலுள்ள கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் முகாம் வெற்றிகரமாக தாக்கிஅழிக்கப்பட்டதாக சிறிலங்கா அரசு வழமைபோலவே தனது ஊதுகுழல் ஊடகங்கள் மூலம் செய்திகளை பரப்பி இப்படுகொலையை திசைதிருப்பியிருந்தது. அந்நிலையில்

# மன்னார் படகுத்துறை படுகொலை 2007

1995ம் ஆண்டு யாழ்ப்பாணத்தின் மீது சிறிலங்கா அரச பயங்கரவாதம் மேற்கொண்ட வல்வளைப்பு நடவடிக்கையின் போது யாழ்ப்பாணம் நாவாந்துறைப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த சுமார் 35 வரையான குடும்பங்கள் இங்கு குடியேறி வாழ்ந்துவந்தனர். இவர்கள் கடற்தொழிலை பிரதான தொழிலாக கொண்டிருந்தமையினால் அவர்களின் தொழிலுக்கு இக்கிராமம் ஏற்புடையதாக இருந்தது.

ஜனவரி 02, 2007அன்று காலை 9.30மணிக்கு இக்கிராமத்தின் மக்கள் குடியிருப்புகளுக்கு மேலாக “வண்டு” எனப்படும் சிறிலங்கா அரசின் வேவு விமானம் இரண்டு மணித்தியாலங்களுக்கு மேலாக பறந்துகொண்டிருந்தது. சற்று நேரத்தில் திடிரென அப்பகுதி வான்பகுதிக்குள் நுழைந்த சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான 03 கிபிர் விமானங்கள் அக்கிராமத்திலிருந்த மக்கள் குடியிருப்புகளை இலக்குவைத்து தொடர்ச்சியான குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டன.

இத்தாக்குதலில் 9 வயதிற்குட்பட்ட 7 சிறுவர்கள், கர்ப்பிணிப்பெண்ணொருவர், அவரின் கணவர் மற்றும் பிள்ளை உட்பட 15 பேர் கொல்லப்பட்டிருந்தனர். 37 பேர் படுகாயமடைந்திருந்தனர்.

காயமடைந்தவர்களுக்கு மருத்துவ உதவிகள் கிடைப்பதும் சிறிலங்கா அரச படைகளால் தடுத்து நிறுத்தப்பட்டிருந்தன. அப்பகுதியிலிருந்த முழங்காவில் மற்றும் பள்ளமடு வைத்தியசாலைகள் காயமடைந்த அதிதீவிர நிலையிலிருந்தவர்களுக்கு சிகிச்சையளிப்பதில் கடுமையான நெருக்கடிகளை எதிர்கொண்டிருந்தன. மன்னார்



தான் மன்னார் ஆயர் இராயப்பு யோசப் மற்றும் ஐ.சி.ஆர்.சி அமைப்பினர் அங்குசென்று அப்பகுதிகளைப் பார்வையிட்டு அங்கே தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒரு சிறிய பங்கர் கூட இருக்கவில்லை என்பதையும், பொதுமக்களை இலக்குவைத்து தான் இத்தாக்குதல் நடைபெற்றிருந்தது என்பதை உறுதிப்படுத்தியிருந்தனர்.

இச்சம்பவத்தில் படகுத்துறை கிராமம் முற்றாக அழிவடைந்தது. அக்கிராமத்தில் 35 தற்காலிக வீடுகளில் 46 குடும்பங்களைச் சேர்ந்த 231 பேர் வசித்துவந்துள்ளனர். ஆனால் ஒரேயொரு வீடு மாத்திரமே அழிவடையாமல் தப்பியிருந்தது. இதுவே இத்தாக்குதலினதும், சிறிலங்கா அரச பயங்கரவாதத்தினதும் கோரமுகத்தை எடுத்துக்காட்டுகின்றது.

**இனப்படுகொலைக்கான சர்வதே நீதியை தொடர்ந்தும் வலியுறுத்துவோம்...!**




சிறிலங்கா அரச பயங்கரவாதத்தின் இத் தாக்குதலில் பாதிக்கப்பட்ட ஒருகுடும்பம். இத்தாக்குதலில் குடும்பத் தலைவரான ஜெகனின் வலது கால் முழங்காலுடன் துண்டிக்கப்பட்டது. 06 வயது மகனான அன்ரனியின் வலது கால் தொடையுடன் துண்டிக்கப்பட்டது. 04 வயது மகனான ரெஜிநாதன் கொல்லப்பட்டார். 06 மாதக்குழந்தையான இவரின் பிள்ளையும், மனைவியும் படுகாயமடைந்து உயிர்தப்பியுள்ளனர்...!

**சூரியதீபன்**

# குருதியால் சிவந்த கிளாலி கடல்நீரேரி!

**02.01.1993அன்று கிளாலி கடல்நீரேரியில் படகில் பயணித்துக் கொண்டிருந்த 35 அப்பாவித் தமிழ் மக்கள் சிறிலங்கா கடற்படையால் வெட்டியும், சுட்டும் கொடூரமாக கொல்லப்பட்டதன் 29வது ஆண்டையொண்டி இவ் உண்மைச் சம்பவம் இங்கு பதியப்படுகின்றது.**

யாழ் குடாநாட்டை வெளிப்பகுதிகளுடன் இணைக்கும் பிரதான தரைவழி மார்க்கம் ஆணையிறவு ஆகும். 1990 ஏப்ரல் மாதத்திற்கு முன்னர் யாழ் குடாநாட்டிலிருந்த 8 - 10 லட்சம் வரையான மக்களின் போக்குவரத்து மற்றும் விநியோகப் பாதையாக இதுவே பயன்படுத்தப்பட்டது.

1990ம் ஆண்டு நடுப்பகுதியில் தமிழர்களுக்கெதிரான போரையும், பொருளாதாரத் தடைகளையும் சிறிலங்கா அரசு தீவிரப்படுத்தியதையடுத்து இப்பாதை சிறிலங்கா அரச படைகளால் மூடப்பட்டது. இதனையடுத்து யாழ் குடாநாட்டு மக்களின் வெளிப்பகுதி தொடர்புகள் அனைத்தும் துண்டிக்கப்பட்டது. அதன் பின்னர் குடாநாட்டு மக்களின் போக்குவரத்து மற்றும் விநியோக மார்க்கங்கள் ஆணையிறவிற்கு மேற்குப்பக்கமாக இருந்த பூநகரி - கேரதீவு - சங்குப்பிட்டி பகுதியூடாக அமைந்தது. இப்போக்குவரத்து மார்க்கம் கடல் வழியூடாகவே அமைந்திருந்ததுடன், கேரதீவு சங்குப்பிட்டியூடான கடல்நீரேரியை கடப்பதற்கு பாதையை (ferry) பயன்படுத்தி வந்தனர். இதனூடாக பாரவூர்திகள் மற்றும் வாகனங்கள் என்பனவும் நகர்த்தப்பட்டது.

அந்நிலையில் தான் 1991ம் ஆண்டு பூநகரியை சிறிலங்கா இராணுவம் வல்வளைப்புச் செய்தது. இதனால் அந்த போக்குவரத்துப் பாதையும் தடைப்பட்டுப் போனது. பின் யாழ் குடாநாட்டு மக்களின் பாதையாக வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு ஊடான கடற்கரைப்பாதை பயன்படுத்தப்பட்டது. "பலவேகய - 01" நடவடிக்கை மூலம் சிறிலங்காப் படைகள் அப்பகுதியையும் வல்வளைப்புச் செய்ததையடுத்து அப்பாதையும் தடைபட்டுப் போனது. அதனையடுத்து வெற்றிலைக்கேணி - கட்டைக்காடு கடற்கரைப் பாதைக்கும், ஆணையிறவிற்குமிடையில் அமைந்துள்ள கொம்படி - ஊரியான் பாதை பயன்படுத்தப்பட்டது. மக்கள் இடுப்பளவில் தேங்கிநிற்கும் தண்ணீருக்குள்ளால் சிறுபடகுகளில் அண்ணளவாக 5 கிலோமீற்றர் பயணம் செய்து வன்னி பெருநிலப்பரப்பையடைந்து, அங்கிருந்து ஏனைய பகுதிகளுக்கு பயணம் செய்து வந்தனர்.

"பலவேகய - 02" என்ற பெயரில் இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்த ஆணையிறவு முகாம் படையினர் வெற்றிலைக்கேணி - கட்டைக்காடு - ஆணையிறவு இராணுவ முகாம்களை உள்ளடக்கி பாரிய இராணுவ வேலியை அமைத்துக்கொண்டனர். அப்பாதையும் தடைபட்டுப் போனதால் யாழ் குடாநாட்டில் உணவு, மருந்து மற்றும் அத்தியாவசியப் பொருட்களுக்கு கடும் நெருக்கடி நிலவியது.

இதன்பின் மாற்றுப்பாதையாக கிடைத்தது தான் கிளாலிப்பாதை. தென்மராட்சியிலுள்ள கிளாலி கடற்கரையிலிருந்து மறுகரையில் பூநகரிக்கு அண்மித்திருக்கும் நல்லூர், ஆலங்கேணிக்கு கடல்நீரேரியூடாக 20 கடல்மைல் தூரத்தை நான்கு மணித்தியாலம் படகுகள் மூலம் பயணித்து அடைவதே இந்த மாற்றுப்பாதை. இப்பாதையில் கிளாலியிலிருந்து நல்லூர் நோக்கிச் செல்கையில் இடப்பக்கம் ஆணையிறவு, வலப்பக்கம் பூநகரி கூட்டுப்படைத்தளம் என சிறிலங்கா இராணுவத்தின் பெரும் இராணுவ முகாம்கள் அமைந்திருந்தன. அதிலும் பூநகரி



கூட்டுப்படைத்தளத்துடன் இணைந்திருந்த நாகதேவன்துறை கடற்படை முகாமிலிருந்து மிகப்பெரிய ஆபத்தை எதிர்கொண்டுதான் இப்பயணங்கள் நடைபெற்றுவந்தது. இப்பாதையையும் தடைசெய்யும் நோக்கில் சிறிலங்கா படைகள் பல முயற்சிகளை எடுத்திருந்தனர். அவ்வப்போது நாகதேவன்துறையிலிருந்து வரும் கடற்படையினரால் பல தாக்குதல்கள் மக்கள் மீது நடாத்தப்பட்டு பலர் கொல்லப்பட்டிருந்தனர்.

அப்படித்தான் ஜனவரி 02, 1993அன்று இரவும் மக்கள் படகுகளில் கிளாலியிலிருந்து ஆலங்கேணி நோக்கி சென்றுகொண்டிருந்த போது இயந்திரக் கோளாறு காரணமாக 04 படகுகள் இடையே கடல்நடுவில் நின்றுவிட்டன. அப்போது கடற்படைப்படகுகளில் வந்த கடற்படையினர் தத்தளித்துக் கொண்டிருந்த படகுகளிலிருந்த மக்கள் மீது துப்பாக்கியால் சுட்டும், கூரிய ஆயுதங்களால் வெட்டியும் தாக்குதல் நடாத்தினர். இத்தாக்குதலில் மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள் உட்பட 35 வரையானோர் கொல்லப்பட்டனர். 50 வரையானோர் காயங்களுடன் மறுநாள் காலையே கரையை அடைந்தனர். கொல்லப்பட்டவர்களின் சில சடலங்கள் நாட்கள் கழித்து கரையொதுங்கியது.

கடற்படையின் இப்படைகளால் மக்கள் அச்சமடைந்திருந்தாலும் வேறுவழிகள் இல்லை எனும் நிலையில் இப்பாதையை தொடர்ந்தும் மக்கள் பயன்படுத்திவந்தனர். அந்நிலையில் அதே 1993ம் ஆண்டு யூலை மாதம் மற்றும் டிசம்பர் மாதங்களில் மீளவும் அப்பகுதியில் பயணித்த மக்கள் மீது பாரிய கொலைத்தாக்குதல்கள் சிறிலங்கா அரசபடைகளால் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இவ்வாறு கிளாலி பாதையூடாக பயணித்த 150 - 200 வரையான தமிழ் மக்கள் சிறிலங்கா கடற்படையினரால் சுட்டும் வெட்டியும் கொல்லப்பட்டிருக்கின்றனர். பலநூற்றுக்கணக்கானோர் அங்கவீனராக்கப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சங்கீதன்

## மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் 16ம் ஆண்டு நினைவேந்தல் யாழில்!

25.12.2022





## திருகோணமலை 05 மாணவர் படுகொலை, கிளாலி, மன்னார் படகுத்துறை படுகொலைகளின் நினைவேந்தல்!

02.01.2023








# கேப்பாபிலவு நிலமீட்புப் போராட்டம்!

27.12.2022









## சிங்கத்தின் குகைக்குள் அஞ்சா நெஞ்சத்தவர்

# மாமனிதர் குமார் பொன்னம்பலம் நினைவுப் பேருரை



தலைமை :

**திரு. இ. சத்தியசீலன்**

(ஆசிரியர், கிளி/ கோணாவில் மகா வித்தியாலயம்)

நினைவுப் பேருரை :

**கலாநிதி. க. சிதம்பரநாதன்**

(முன்னாள் தலைவர், ஓய்வுபெற்ற விரிவுரையாளர்,
நுண்கலைத்துறை,
கலைப்பீடம், யாழ். பல்கலைக்கழகம்)

இடம் :
கலைத்தூது மண்டபம்,
பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

காலம் :
06.01.2023
வெள்ளிக்கிழமை
மாலை 03.00 மணி

**தமிழ்த் தேசப்பற்றாளர்களை அன்புடன் அழைக்கின்றோம்**

- மாமனிதர் குமார் பொன்னம்பலம் நினைவேந்தல் ஏற்பாட்டுக்குழு -





யாழ் நகரில் 25வருட கால அனுபவமிக்க கைக்கடிகாரங்கள் திருத்துனரும், விற்பனையாளரும்...! மின்சாரப் பொருட்கள் விற்பனையாளரும்...!

**இன்றே நாடுங்கள்**

**யாழ் சதீஸ் எலக்ரோனிக்ஸ் & வோச் வேக்ஸ்**

இல 55, 57 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி : 077 613 6007



**ஜயான்ஸ்**

**குளிர்களி உற்பத்தியும் நடமாடும் விற்பனையும்**

முகவரி : உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்

தொடர்புகளுக்கு : 077 618 4602